திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் செயல்முறைகள்-திருவள்ளூர்-602001
முன்னிலை : திருமதி.வெ.வெற்றிச்செல்வி எம்.எஸ்.சி., எம்.எட்., எம்.பில்.,

ந.க.எண்.10/அ1/2021, நாள். .01.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி-திருவள்ளூர் மாவட்டம்-பழவேற்காடு ஐசு அரசு மேல்நிலைப் பள்ளி இளநிலை உதவியாளர் பணிபுரியும் திரு.என்.சரவணன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்-சார்ந்து.

பார்வை: 1. சென்னை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு துணைச் செயலாளரின் கடிதம் எண்.4040/PSD-D1/2013, நாள்.09.11.2019
2.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.99801/அ4/இ1/2018, நாள்.20.11.2019
3.திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.15119/அ1/2019, நாள். .01.2019.
4.பொன்னேரி, மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2082/அ1/2020, நாள்.29.12.2020

*************

பார்வை 3-ல் கண்டுள்ள செயல்முறைகளுடன் பெறப்பட்ட கருத்துருவில் திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஐசு அரசு மேல்நிலை பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.என்.சரவணன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யக் கோரி கருத்துரு பொன்னேரி மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்டது.

பார்வை 4-ல் கண்டுள்ள செயல்முறைகளினைத் தொடர்ந்து பணிவரன்முறை கோரும் கருத்துருவினை பரிசீலினை செய்ததில், அன்னார் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 1-ல் கண்ட செயல்முறைகள் மூலம், பழவேற்காடு ஐசு அரசு மேல்நிலைப் பள்ளி இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டவர் என்றும், அன்னார் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 13.01.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைச் செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்காண் இளநிலை உதவியாளர் பணிவரன்முறைச் செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்திலிருப்பவர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மேற்காண் இளநிலை உதவியாளர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்விலும், பாவனிசாகர் அடிப்படைப் பயிற்சியிலும் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளவும், சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேடு கிடைக்கப்பெற்றவுடன் ஒப்புதலை உடன் அனுப்பிவைக்குமாறு பொன்னேரி மாவட்டக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு-பணிப்பதிவேடு மற்றும் ஆணைநகல்

(ஒப்பம்) 21/1/2021
முதன்மைக் கல்வி அலுவலர்
திருவள்ளூர்

பெறுநர்:
மாவட்டக் கல்வி அலுவலர், பொன்னேரி
நகல்-தலைமை ஆசிரியர்,
ஐசு அரசு மேல்நிலைப் பள்ளி, பழவேற்காடு

(ஒப்பம்) 27/1/21

21/01/22
HEAD MASTER
J.S. GOVT. HR. SEC. SCHOOL
PAZHAVERKADU-601 205

Scanned by Scanner Go